for leave to move the resolution shall be entered in the list of business in the name of the member concerned on the day of the meeting immediately after the expiry of the fourteen days, notice as required under Article 179 of the Constitution.

இன்று கேள்வி நேரம் முடிந்த பிறகு சில நடவடிக்கைகள் ரூல் 41-ன் கீழே எடுக்கப்பட்டது. உங்களுடைய கிளியர் ரூலிங்கை நான் அறிய விரும்புகிறேன். இந்த ரூல் 53 அடிப்படையில் பார்க்கிறபோது கேள்வி நேரம் முடிந்த உடனே இது எடுக்கப் படாமல், ரூல் 41-ன் கீழே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதே அது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

The motion shall be taken into consideration immediately after Question Hour.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : ரூல் 41-ன் கீழ் வரும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எப்போதுமே அஜெண்டாவில் சேர்ப்பது கிடையாது. இன்பார்மலாகவே வைத்துக்கொள்வதே தவிர அஜெண்டாவில் வருவது இல்லை. இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

5. பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : இப்போது பேரவையின் முன்னுள்ள அலுவல் பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் ஆகும். இத் தீர்மானத்தை முன்மொழியப் பேரவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறியுமுன் அதை இப்பேரவைக்கு நான் படிக்க வேண்டும். தீர்மானம் பின்வருமாறு உள்ளது.

"That this House resolves to remove the Hon. the Speaker Pulavar K. Govindan from his office on account of his failure to conduct the proceedings of this House in an impartial manner and by ordering expunction of proceedings lasting more than 45 minutes, refusing to allow points of order raised by Opposition

leaders and permitting the members of ruling party to make uncalled for remarks against the Opposition members and shout down the Opposition, etc. "

தீர்மானத்திற்கான அறிக்கை அளித்திருப்பவர்கள்:—

திருவாளர்கள் கோவை செழியன்

கே. டி. கே. தங்கமணி

க. உரோ. எட்மண்ட்

ஆர். பொன்னப்ப நாடார்

திருமதி த. ந. அனந்தநாயகி

ஆகியோர். இந்தப் பேரவையின் 54 (1) விதியின்படி இத் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்க வேண்டும். அதற்கு 35 மாண்புமிகு உறுப்பினர்கள் அனுமதியளிக்க வேண்டும். எனவே அதற்கு அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்களைத் தம் இருக்கையில் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்—

1. திரு. ஆர். பொன்னப்ப நாடார்
2. திருமதி ஜோதி வெங்கடாசலம்
3. திரு. எ. ஆர். மாரிமுத்து
4. திரு. பி. வெங்கடசாமி
5. திரு. கே. டி. கே. தங்கமணி
6. திரு. ஜே. ஜேம்ஸ்
7. திரு. கே. கே. முத்தையா
8. திரு. க. உரோ எட்மண்ட்
9. திரு. கு. அ. பொம்மன்
10. திருமதி த. ந. அனந்தநாயகி
11. திரு. சோ. அழகர்சாமி
12. திரு. ச. சங்குமுத்து தேவர்
13. திரு. கே. பி. கோபால்

14. திரு. சு. ம. துரைராஜ்
15. திரு. ஏ. சுப்பிரமணியம்
16. திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்
17. திரு. எஸ். வடிவேல்
18. திரு. எ. சுவாமிதாஸ்
19. திரு. மு. சத்தியமூர்த்தி
20. திரு. பெ. சௌந்திரபாண்டியன்
21. திரு. கா. காளிமுத்து
22. திரு. எம். சுரேந்திரன்
23. திரு. நா. வெ. குருசாமி
24. திரு. என். கே. பழனிசாமி
25. திரு. ஏ. பாலையா
26. திரு. ஓ. என். சுந்தரம்
27. திரு. கே. என். குமாரசாமி
28. திரு. ம. மோசஸ்
29. திரு. என். மருதாசலம்
30. திரு. என். டென்னிஸ்
31. திரு. அரங்கநாயகம்
32. திரு. நா. காசிராமன்
33. திரு. ஆண்டி அம்பலம்
34. டாக்டர் எச். வி. ஹாண்டே
35. திரு. கோவை செழியன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : முப்பந்தைந்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனுமதி அளிப்பதற்கு ஆதரவாக எழுந்து நிற்பதால் பேரவை அனுமதி அளிக்கிறது என்று தெரிவிக்கிறேன்.

இந்தத் தீர்மானம் 29—3—74 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கிறேன்.

1974 மார்ச் 27]

* **திரு. க. உரோ. எட்மண்ட்:** டெப்யூடி ஸ்பீக்கர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளும் கட்சி கொண்டுவந்த பொழுது ஒரு நாள் முழுவதும் அதை விவாதித்தோம். பேரவைத் தலைவர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதிப்பதற்கு எப்படி ஒரு நாள் போதும்? 35 பேர்கள் பேசியாக வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): காலையிலே மான்யம் பற்றிய விவாதம் இருக்கிறது. அன்றைக்கு மாலையில் எடுத்துக்கொண்டாலும் 3 மணி நேரம் இருக்கிறது. 4 மணிக்கு ஆரம்பித்தால் தொடர்ந்து விவாதிக்கலாம். அதற்கென்று தனியாக ஒரு நாள் தேவையில்லை.

திரு. க. உரோ. எட்மண்ட்: சபாநாயகர் ஆசனத்தில் இருக்கும்பொழுது எங்களுக்கு அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதற்காகத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, வேறு ஒருவர் தலைவராக உட்கார்ந்திருக்கும்பொழுது பேரவைத் தலைவர் எங்களுக்குப் போதுமான நேரம் கொடுக்கவில்லை என்பதைப் பற்றி பேசுகின்ற நேரத்தில் கொஞ்சம் தாராளமாகப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, ஒரு நாள் இதற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 3 மணி நேரம் என்பது ஒரு நாளைத்தான் குறிக்கும். நாளைக்கு மறுநாள் வைக்கப் பட்டிருக்கிறது. இன்னொரு நாள் காலையிலும் வைத்துக்கொண்டு மாலையிலும் வைத்துக்கொள்ளலாம், எதிர்க்கட்சிக்காரர்களுக்குப் பேசுவதற்கு அதிகமாக நேரம் இல்லையே என்றெல்லாம் இப்பொழுது சொல்லிக் கொண்டிருப்பது நல்லது அல்ல. ஆளும் கட்சியினருக்கும் அதிக நேரம் கொடுக்கவில்லையே என்று குறையாகத்தான் இருக்கிறது. அதிக நேரம் கொடுக்கவில்லையே என்று ஆளும் கட்சியினரே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்க வேண்டும். அதிக நேரம் கொடுக்கவில்லை என்பதைப்பற்றி யெல்லாம் பிறகு விரிவாகப் பேசலாம். 3 மணி நேரம் என்பது ஒரு நாளைத்தான் குறிக்கும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, No-Confidence Motion is being moved against the Chair and it is an important motion. So, we can have the discussion on the Demands in the afternoon but the Resolution can be taken up in the morning.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : ஏற்கனவே நான் சொன்னேன். காலையில் பட்ஜெட் டிமாண்ட் இருக்கிறது ஆகவே தான் மாலை 4 மணிக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். அப்பொழுது உங்களுடைய கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லலாம்.

திரு. க. உ. ரா. எட்மண்ட் : மாலையிலே டிமாண்ட் வைத்துக் கொண்டு காலையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வைத்துக் கொண்டு நடத்தலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : அப்ரோப்ரியேஷன் பில் இருக்கிறது. . . . நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்கள் மான்யக் கோரிக்கையைவிட இதுதான் முக்கியம் என்று கருதுகிற காரணத்தினால் மான்யக் கோரிக்கையை மாலை நேரத்திற்கு தள்ளிவிட்டு இதைக் காலையிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் உங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தாலும் வந்துவிடும். 29—3—74 அன்று காலையில் எடுத்துக்கொள்ளலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மிஸ்டர் சேர்மன் ஸார், உங்களுக்குச் சௌகரியமாக இருப்பதற்குத் தான் சொல்கிறேன். ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : இது தொடர்பான பாயிண்டு ஆப் ஆர்டரா, வேறு பாயிண்டு ஆப் ஆர்டரா ?